# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQS)

**நான் NEHR பதிவேட்டில் இருக்கிறேனா?**

NEHR பதிவேட்டின் நன்மைகளை நீங்கள் அடைவதற்கு தானாகவே அதில் சேர்க்கப்படுகிறீர்கள்.

**நான் NEHR பதிவேட்டிலிருந்து விலகிக் கொள்ளலாமா?**

ஆம், நீங்கள் NEHR பதிவேட்டிலிருந்து விலகிக் கொள்ளலாம். அவ்வாறு விலகிக்கொள்ளும் நிலையில், உங்களுக்கு மருத்துவப் பராமரிப்பு வழங்குவோர் உட்பட எல்லா சுகாதாரப் பராமரிப்பு வல்லுநர்களும் NEHR பதிவேட்டிலுள்ள உங்களது சுகாதாரப் பதிவேடுகளை அணுக முடியாது. இதை அறிந்த பிறகும் நீங்கள் NEHR பதிவேட்டிலிருந்து விலகிக் கொள்ள விரும்பினால், அன்புகூர்ந்து பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களின் அலுவலர்களை அணுகவும். விலகல் முறை பற்றியும் அதன் பின்விளைவுகள் பற்றியும் அவர்கள் உங்களுக்கு ஆலோசனை அளிப்பார்கள். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் NEHR பதிவேட்டில் மறுபடியும் சேர்ந்து அதன் நன்மைகளை அனுபவிக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**NEHR பதிவேட்டில் என்னென்ன விவரங்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும்?**

NEHR பதிவேடு பல்வேறு சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் தேசியப் பதிவகங்களிலும் இருந்து விவரங்கள் சேகரித்து, முழுமையான சுகாதாரப் பதிவேடாக ஒருங்கிணைக்கிறது. அதிலுள்ள விவரங்களில் இவை உள்ளடங்கும்:

- மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த, வருகையளித்த விவரங்கள்
- மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய விவர அறிக்கைகள்
- ஆய்வகச் சோதனை முடிவுகள்
- கதிரியக்கச் சோதனை முடிவுகள்
- கடந்தகால மருந்தளிப்பு விவரங்கள்
- கடந்தகால அறுவை சிகிச்சைகள் அல்லது சிகிச்சைமுறைகள் பற்றிய விவரங்கள்
- ஒவ்வாமைகள் மற்றும் மருந்துகளால் ஏற்பட்ட விபரீத விளைவுகள்
- நோய்த்தடுப்பு மருந்துகள்

**NEHR பதிவேட்டிலுள்ள எனது விவரங்களை யாரெல்லாம் அணுகமுடியும்?**

உங்களுக்கு மருத்துவப் பராமரிப்பு வழங்கும் அதிகாரம் பெற்ற சுகாதாரப் பராமரிப்புத் துறையினர் மட்டுமே NEHR பதிவேட்டிலுள்ள உங்களது சுகாதாரப் பராமரிப்பு விவரங்களை அணுகமுடியும்.

**எனது மருத்துவப் பதிவேடுகளை நான் அணுக முடியுமா? முடியுமானால், எப்படி அணுகுவது?**

நீங்கள் **www.healthhub.sg** இணையத்தளத்தில் "HealthHub" எனப்படும் தேசிய சுகாதார இணையவாசலுக்குள் உட்பதிவு செய்து அல்லது ஐஓஎஸ் (iOS), அன்ட்ராய்ட் (Android) செயலமைவுகளில் கிடைக்கும் **"HealthHub"** செயலியைப் பதிவிறக்கம் செய்து, உங்களது சுகாதாரப் பதிவேட்டின் சில பகுதிகளை அணுகலாம். நீங்கள் பெற்றோராக இருந்தால், உங்கள் பிள்ளைகளின் சுகாதாரப் பதிவேடுகளை அணுக இயலும். உங்களுக்குப் பராமரிப்பாளர்கள் இருந்தால், சுகாதாரப் பதிவேடுகளை அணுக அவர்களுக்கு அனுமதி அளிக்கலாம்.

**NEHR இயங்குமுறை பாதுகாப்பாகவும் எனது பதிவேடுகள் இரகசியமாகவும் இருக்கும் என நான் எப்படி உறுதியாக நம்புவது?**

NEHR பதிவேட்டிலுள்ள உங்கள் விவரங்களைப் பாதுகாக்க, தொழில்துறையின் ஆகச்சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடப்பிலுள்ளன. இந்தப் பாதுகாப்புகள் அடிக்கடி மறுஆய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன. அதோடு, NEHR பதிவேடுகளை அணுக அதிகாரம் பெற்றுள்ள சுகாதாரப் பராமரிப்புத் துறையினர் அனைவரும், சட்டப்படியும் தொழில்சார் நெறிகளின்படியும் உங்களது பதிவேடுகளை (தாள் அல்லது மின்னியல்) மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டும். NEHR பதிவேட்டில் உங்களது சுகாதாரப் பதிவேடுகள் அணுகப்படும் விவரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

**இன்னும் பல அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைக் காண, அன்புகூர்ந்து www.ihis.com.sg/NEHR இணையத்தளத்திற்குச் செல்லவும்.**





ஒரு நோயாளி என்ற முறையில் **NEHR** பதிவேடு உங்களுக்கு முக்கியமா?

**NEHR** பற்றி மேல்விவரம் அறியவும் சிறு கருத்தாய்வில் உங்கள் கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் **www.ihis.com.sg/nehr** இணையத்தளத்திற்குச் செல்லவும்.

விவரங்கள் கேட்டறியவும் கருத்துகள் தெரிவிக்கவும், அன்புகூர்ந்து **65942009** என்ற எண்ணை அழைக்கவும் அல்லது **nehr.feedback@ihis.com.sg** முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்

MINISTRY OF HEALTH
SINGAPORE

IHiS
Because IT's in Healthcare

NEHR பதிவேடு சிங்கப்பூர் சுகாதார அமைச்சகம் சொந்தமானது. சிங்கப்பூரின் சுகாதாரப் பராமரிப்பு தொழில்நுட்ப அமைப்பான ஒருங்கிணைந்த சுகாதாரத் தகவல் இயங்குமுறை (IHiS) பதிவேட்டை நிர்வகிக்கிறது.

# NEHR

National Electronic Health Record
Singapore

*One Patient, One Health Record*



## NEHR பதிவேடு நோயாளிகளுக்கே முதன்மையளிக்கிறது உங்களுக்கு மேம்பட்ட கவனிப்பு வழங்க துணைபுரிகிறது.

- நோயாளியை மையப்படுத்தி பராமரிப்பு வழங்க சுகாதாரப் பராமரிப்புத் துறையினரை இணைக்கிறது
- மேம்பட்ட சுகாதார விளைவுகளை அடைகிறது
- நோயாளியின் பாதுகாப்பைக் கூட்டுகிறது
- தடங்கலற்ற பராமரிப்புடன் நோயாளியின் சிகிச்சையை மேம்படுத்துகிறது



NEHR
National Electronic Health Record Singapore

## NEHR பதிவேடு நோயாளிகளுக்கே முதன்மையளிக்கிறது உங்களுக்கு மேம்பட்ட கவனிப்பு வழங்க துணைபுரிகிறது.

நம்மில் பலரும் நமது வாழ்நாளில் பல்வேறு சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களுக்குச் செல்வது வழக்கம் – தனியார் பொது மருத்துவர்களின் மருந்தகங்கள், பலதுறை மருந்தகங்கள், நிபுணத்துவ சிகிச்சை மருந்தகங்கள், சிகிச்சை நிலையங்கள், மருத்துவமனைகள் இதில் உள்ளடங்கும். இதன் காரணமாக, இந்தச் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிடமும் நமது சுகாதாரப் பராமரிப்பு விவரங்களின் சில பகுதிகள் இருக்கும்.

தேசிய மின்னியல் சுகாதாரப் பதிவேடு **(NEHR)** என்பது பல்வேறு சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலுள்ள நோயாளியின் சுகாதாரப் பதிவேடுகளின் சுருக்கமான விவரத்தைச் சேகரித்து தொகுத்துவைக்கும் பாதுகாப்பான இயங்குமுறையாகும். அதிகாரம் அளிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்புத் துறையினர் உங்களது கடந்தகால சுகாதாரப் பராமரிப்பு விவரங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள இது துணைபுரிகிறது. "ஒரு நோயாளிக்கு ஒரே சுகாதாரப் பதிவேட்டுடன்", உங்களது பராமரிப்புக் குழுவினர் உங்களுக்குப் பாதுகாப்பான, மேம்பட்ட, பொருத்தமான **பராமரிப்பை** வழங்க இயலும்.



## நோயாளியை மையப்படுத்தி பராமரிப்பு வழங்க சுகாதாரப் பராமரிப்புத் துறையினரை இணைக்கிறது

உங்களது சுகாதாரப் பதிவேட்டிலுள்ள முக்கியமான விவரங்களின் சுருக்கம், மின்னியல் முறையில் ஓரிடத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும். சிங்கப்பூர் முழுவதிலுமுள்ள பல்வேறு சுகாதாரப் பராமரிப்புத் துறை வல்லுநர்கள் ஒன்றாகச் செயல்பட்டு உங்களுக்கு **மேம்பட்ட பராமரிப்பு** வழங்க இது துணை புரிகிறது. எடுத்துக்காட்டாக, உங்களது மருத்துவர் உங்களின் சுகாதாரப் பதிவேட்டைப் படித்துப் பார்த்து, உங்களது நிபுணத்துவ மருத்துவர் அல்லது சிகிச்சையாளருடன் சேர்ந்து, உங்களுக்கான **முழுமையான பராமரிப்புத்** திட்டத்தை வகுக்க முடியும்.

## மேம்பட்ட சுகாதார விளைவுகளை அடைகிறது

NEHR மூலம் உங்களது கடந்தகாலச் சுகாதாரப் பராமரிப்பு விவரங்களை நன்கு புரிந்துகொள்ளும் மருத்துவரால் **அதிக பயன்மிக்கப் பராமரிப்பை** வழங்க இயலும். உங்கள் உடல்நலனைத் தேற்றக்கூடிய ஆகச்சிறந்த சிகிச்சையை நன்கு விவரமறிந்து மருத்துவர் தீர்மானிப்பதால், நீங்கள் **மேம்பட்ட சுகாதார விளைவுகளை** அடைய உதவியாக இருக்கும்.



Photo credit: SingHealth Polyclinics

## தடங்கலற்ற பராமரிப்புடன் நோயாளியின் சிகிச்சையை மேம்படுத்துகிறது

நீங்கள் மருத்துவக் கவனிப்புக்காக இடம் மாறவேண்டிய நிலையில், எடுத்துக்காட்டாகத் தனியார் பொது மருத்துவரின் மருந்தகத்திலிருந்து மருத்துவமனைக்கு, அல்லது மருத்துவமனையிலிருந்து தாதிமை இல்லத்திற்கு மாறவேண்டிய நிலையில், நீங்கள் **தடங்கலின்றி மாறிச்செல்ல** NEHR உதவுகிறது. அதே சோதனைகளும் பரிசோதனைகளும் மீண்டும் செய்யப்படுவதைத் தவிர்த்து, **உங்கள் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த** துணைபுரிகிறது.



## நோயாளியின் பாதுகாப்பைக் கூட்டுகிறது

NEHR பதிவேட்டுடன், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள், மருந்து ஒவ்வாமைகள், நோய்கள், ஆய்வாகச் சோதனை முடிவுகள் ஆகியவற்றை மருத்துவர்கள் பார்வையிட்டு, **பாதுகாப்பான பராமரிப்பை** வழங்க இயலும். மற்ற மருத்துவர்கள் கொடுத்த மருந்துகளின் பெயர்களை அல்லது கண்டறிந்த நோய்களை உங்களால் அல்லது உங்களது பராமரிப்பாளரால் நினைவுகூற முடியாத நிலையில், அல்லது பேச இயலாத நிலையில் (எ.கா. குரல் இழப்பு, சுயநினைவிழப்பு) இது பயனளிக்கும். தேவையற்ற விபரீத மருந்து ஒவ்வாமைகளைத் தவிர்க்க இது துணை புரியும். மருத்துவ அவசரநிலையில், **NEHR பதிவேட்டிலுள்ள முக்கிய விவரங்கள் உங்கள் உயிரை அல்லது உங்கள் அன்புக்குரியவர்களைக் காப்பாற்றக்கூடும்.**



Photo credit: National University Hospital

## NEHR பதிவேட்டுடன் நோயாளிகள் பயனடைந்த எடுத்துக்காட்டுகள்

I'M on the NEHR

**எனக்கு ஆஸ்த்மா இருக்கிறது. எனது மருத்துவப் பதிவேடுகள் சுகாதாரப் பராமரிப்பு இயங்குமுறையில் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. மருத்துவ அவசரநிலையில் NEHR என் உயிரைக் காப்பாற்றியது!**

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டது எனக்கு நினைவிருக்கிறது. எனது இதயத்துடிப்பு சீரில்லாமல் இருந்தது. என்னால் சரியாக மூச்சுவிட முடியவில்லை. வயிற்றில் கடுமையான வலி. நான் மயக்கத்தில் இருந்ததால் எனது ஆஸ்த்மா மருந்தின் பெயர் நினைவில்லை. நல்ல வேளையாக, மருத்துவர் அந்த விவரத்தை NEHR பதிவேட்டில் தேடியெடுத்து, மருந்தின் பக்கவிளைவுகளால் நான் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்தார். NEHR பதிவேட்டால், எனது உடல்நலப் பாதிப்பு சரியாகக் கண்டறியப்பட்டு, தக்க சமயத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு, அந்த ஆபத்திலிருந்து நான் தப்பிப் பிழைத்தேன்!

I'M on the NEHR

**நான் ஒரு மருத்துவ நிலையத்திலிருந்து மற்றொன்றுக்கு மாறவேண்டிய நிலையிலும் எனக்குத் தடங்கலற்ற பராமரிப்பு கிடைத்தது. அதற்கு NEHR பதிவேடு துணை புரிந்தது. முக்கியமான சுகாதாரப் பராமரிப்பு விவரங்கள் அனைத்தும் இணையத்தில் ஓரிடத்தில் கிடைப்பதால் இது சாத்தியமானது.**

சிறுநீர் கிருமித்தொற்றுக்குச் சிகிச்சை பெற எனது தனியார் பொது மருத்துவரிடம் சென்றேன். எனது அறிகுறிகளின் அடிப்படையில், நீரிழிவு நோய் இருக்கக்கூடும் என அவர் சந்தேகித்தார். எனவே, என் வீட்டுக்கு அருகிலுள்ள பலதுறை மருந்தகத்திற்குச் செல்ல பரிந்துரை செய்தார். அங்கிருந்து நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகத்திற்கு அனுப்பப்பட்டேன். இந்த அனுபவம் தடங்கலின்றி சௌகரியமாக அமைந்தது எனக்கு ஆச்சரியமளித்தது. அதே பரிசோதனைகள் மீண்டும் மீண்டும் செய்யப்படவில்லை. சரளமான கவனிப்பு கிடைத்ததால் மன உளைச்சல் ஏற்படவில்லை. சுகாதாரப் பராமரிப்பு வழங்கியவர்கள் அனைவரும் எல்லா விவரங்களையும் அறிந்திருந்தது மனநிம்மதி அளித்தது!